நில ஆர்ஜிதம் செய்தும் இன்னும் ரோடுகள் போடப்படாத நிலையில் பாரஸ்டினுடைய இடையூறு இருக்கிறது. எனவே, இதை நிவர்த்தி செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பகுதியிலேயிருந்த, வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை, 5 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களை அங்கே இருக்கின்ற பல்வேறு எஸ்டேட் முதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். வனத் துறை உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அந்த ஆக்கிரமிப்பு அனைத்தும் இப்போது அகற்றப்பட்டு இருக்கிறது. இப்போது அங்கே சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டி, 8–3–1992 அன்று, அந்த ஆக்கிரமிப்புகளை, நாம் அகற்றியதை மீண்டும், அங்கே சென்று ஆக்கிரமிப்பு செய்வோம் என்று சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே கூட்டம் கூட்டி பேசியதாகச் சொல்கிறார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு நம்முடைய வன த்துறை அலுவலர் அவர்கள் கொண்டு சென்றிருக்கிறார்கள். சர்வ கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே நிறைந்து இருக்கின்ற காரணத்தால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, எல்லா மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய தமிழகத்தில்தான் குறைந்த வனப்பகுதி இருக்கின்ற காரணத்தால், இதுபோன்ற வனப்பகுதிகளிலே ஆக்கிரமிப்பு செய்கின்றவர்களை அகற்றுகின்ற போது, அருள் கூர்ந்து, உங்களுடைய ஒத்துழைப்பை அவர்களுக்கு நல்காமல், இந்த அரசுக்கு உங்களுடைய ஆதரவை நல்கிட வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாக இங்கே வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 482, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

482—

கன்னியாகுமரியில் விமான இறங்கு தளம்

*4672—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் விமான இறங்கு தளம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 ஏப்ரல் 7]

சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் விமான இறங்குதளம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய அவசியமென்று கருதவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி இந்தியாவிலுள்ள ஒரு சிறந்த சுற்றுலா மையம். வடநாட்டிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகளும், வி.ஐ.பி.களும் அங்கே வருகிறார்கள். குமரி மாவட்டத்திற்கு விமானம் மூலம் வருகை தருகின்றவர்கள் ஒன்று, 90 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருவனந்தபுரத்திற்கோ அல்லது 250 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மதுரைக்கோ தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, ஒரு வாயுதூத் விமானம் போக்குவரத்தையாவது அரசு அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்திய விமான நிறுவனமும் வாயுதூத் கம்பெனியும் கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்த தளம் அமைப்பதற்கு முன் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் சுற்றுலாத்தலம் என்பது நம்முடைய அரசுக்கு நினைவிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றதற்குப் பிறகு தூத்துக்குடியிலிலேயே விமான தளம் மிக விரைவிலே திறக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், கன்னியாகுமரியில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

483—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 483

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

*1248—திரு. என்.ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் அருகில் முட்டம் கிராமத்திலிருந்தும் மயிலாடுதுறை அருகிலுள்ள மணல்மேடு கிராமத்தின் வழியாகவும் கொள்ளிடம் ஆற்றைக் கடக்க ஆற்றின் குறுக்கே போக்குவரத்துப் பேருந்துகள் செல்லும் அளவிற்கு பாலம் ஒன்று கட்டப்படுமா?

(ஆ) நிதிப் பற்றாக்குறை இருப்பின், தரைப் பாலமாவது கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?